# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.319 /2024

dated : 12.02.2026

P.W.1

Name கனகராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்தேன். எதிர் வழக்குரை விவரங்கள் உண்மையானதா என்றால் இல்லை. நான் தாவா சொத்து உள்ள ஊரிலும், கோவில்பட்டியிலும் அவ்வப்போது இருப்பேன். வழக்குரை சொத்து கோவில்பட்டியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ளது. என் தாயார் பெயர் மாரியம்மாள் எல்லம்மாள் என்றும் அழைப்பார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா பெயர் எல்லப்ப நாயக்கர். என் தந்தை பெயர் எல்லப்ப நாயக்கர் என்பதால் என் தாயரையும் எல்லம்மாள் என்று அழைப்பார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் கண்ட சங்கதிகள் உண்மைதான். 12.07.2006 ல் என் தந்தை இறந்துபோனார். 09.02.2021 ம் தேதி வாரிசு சான்று பெற்றேன் என்றால் சரிதான். என் தந்தையின் இறப்பு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வழக்கறிஞர் வசம் உள்ளது. என் தந்தை எங்கள் ஊரில் வயோதிகம் காரணமாக

இறந்துபோனார். என் தாயார் 12.05.2021ல் இறந்தபின்னர் என் தந்தைக்கு வாரிசு சான்று பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அதற்கு விண்ணப்பித்து பெற்றோம். நான் என் தந்தையின் வாரிசு சான்று பெற்றபோது என் தாயார் உயிருடன்தான் இருந்தார். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காகவே வாரிசு சான்று பெற்றோம் என்றால் சரியல்ல. என் தந்தை இறந்ததேதி உண்மையல்ல என்றும் நான் உத்தேசமாக அவர் இறந்த தேதியை குறிப்பிட்டுள்ளேன் என்றும் வாரிசு சான்றுக்கு குறிப்பிட்டுள்ள தேதியும் உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. 01.04.2008ம் தேதியிட்ட வா.சா.ஆ.8 ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானதாகும். 02.05.2024 தேதி கருப்பசாமி என்பவர் எழுதிப் பெற்று கிரைய ஆவணத்தில் உள்ள சங்கதிகள் சரியானதுதான். நாங்கள் மூவரும் சேர்ந்து சொத்தை அனுபவித்து வந்தோம் என்பதை காட்டும் ஆவணங்களான தீர்வை இரசீது, அடங்கல் அனுபவச் சான்று எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 30.05.2024 தேதியிட்ட வா.சா.ஆ.10 ல் உள்ள சங்கதிகள் உண்மையானதுதான். 16.01.1985ம் தேதியில் என் தந்தை சொத்தை என் தாயாருக்கு வாய்மொழியாக கொடுத்தும் எனக்கும் சகோதரிக்கும் கையில் இருந்த அசையும் சொத்துக்கள் அனைத்தையும் ஒப்படைத்தும் என் தாயாருக்கு கொடுக்கப்பட்ட சொத்திலிருந்து நாங்கள் உடமை நீக்கம் செய்யப்பட்டோம் என்றால் சரியல்ல. நாளது தேதிவரை அவ்வாறு நாங்கள் மூவரும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்பது குறித்த ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. என் தாயார் அவ்வாறு என் தந்தையிடமிருந்து நன்கொடை

பெற்ற நாள் முதல் இறக்கும்வரை தாவா சொத்துக்கள் உட்பட அனைத்தையும் தன்னுடைய தனிப்பட்ட உரிமையில் தனிச்சொத்தாக அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின்பேரில் என் தாயார் பெயரில் மட்டும் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் தாயார் பெயரில் மட்டும் பட்டா வழங்கப்பட்டதை ஆட்சேபித்து நானும், என் சகோதரியும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். 28.05.2021ம் தேதி என் தாயார் கொரோனா பெருந்தொற்று காரணமாக இறந்துபோனார் அவர் இறப்பில் நானும் கலந்துகொண்டு இறுதிச்சடங்கு செய்தேன் அந்த இறப்பு சான்றை ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான். என் தாயார் இறப்பதற்கு முன்பு நல்ல உடல்நிலையுடனும் திடகாத்திரமாகவும் இருந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் உடல்நலம் சரியில்லாமல் இருந்து வந்தார் என்பதை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் இறக்கும்வரை நல்ல நிலையில் இருந்து வந்தார் என்றும் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார் என்று சொல்வது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தில் 2024 ம் ஆண்டுக்கு முன்பு வரை பயில் காப்பீடு செய்யப்படவில்லை. 2024 ல் பயிர் காப்பீடு செய்யப்பட்டது ஏனென்றால் இம்மாவட்டத்திலிருந்து அறிவிப்பு வெளியிடப்பட்டதை நான் கேள்விப்பட்டு காப்பீடு செய்தேன். நான் காப்பீடு செய்வதற்கு அளித்த விண்ணப்பத்தையும் மாவட்ட விவசாய அலுவலர் கொடுத்த சான்றையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயிர் காப்பீடு செய்யவில்லை என்றும்

இவ்வழக்கில் வழக்குமூலம் மற்றும் காலவரையறையை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் அவ்வாறு பயிர் காப்பீடு செய்ய முற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 01.04.2008 ம் தேதியன்றே பிரதிவாதி நிறுவனத்திற்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் அதற்கு முன்பே பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் இந்த விவரம் அந்த கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட நாளன்றே தெரியும் என்றால் சரியல்ல. என் சகோதரிக்கும் தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சுரேஷ் என்பவர் என் தாயாரை ஏமாற்றி அதிகார ஆவணம் எழுதி பெற்றுள்ளார் என்பது தொடர்பாக சுரேஷ் என்பவர் மீதோ சுரேஷ் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் மீது நடவடிக்கை எடுக்கவோ காவல் துறையினர் மூலம் புகார் கொடுக்கவில்லை. என் தாயாரும் அவரை ஏமாற்றி எழுதிப் பெற்றதாக புகார் ஏதும் கொடுக்கவில்லை. என் தாயார் சுரேஷ் என்பவருக்கு அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்த விவரமும் இந்த வழக்கு தாக்கல் செய்தபோதுதான் தெரியும். என் தாயார் இறக்கும்வரை திடகாத்திரமாக இருந்து வந்தார் என்றும் அவர் திடீரென மாரடைப்பு காரணமாக இறந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைதான். அந்த ஆவணத்தில் என் தாயார் அடிக்கடி வியாபார நிமித்தம் வெளியூர் செல்லவேண்டியிருப்பதால் சுரேஷ் என்பவருக்கு அதிகாரம் கொடுப்பதாக கூறியுள்ளார் என்றால் அது உண்மையல்ல. அதிகார ஆவணத்தின்

அடிப்படையில் வா.சா.ஆ.8 முதல்10 ஆவணங்கள் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதை இரத்து செய்து தரும்படி நான் பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றால் சரிதான். நான் அதுபோன்ற பரிகாரம் ஏதும் கோராதநிலையிலும் வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதாலும் வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை மாற்ற நான் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் பெயரில் மட்டும் ஏற்பட்ட நிலவுடைமை மேம்பாட்டு திட்ட பட்டாவையும் இரத்து செய்ய நான் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். கருப்பசாமி பணபலம், செல்வாக்கு மிகுந்தவர் என்று நான் கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. அவர் பயிர் தொழிலாளி என்றும் செல்வாக்கு மிகுந்தவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்திலிருந்து 40 ஆண்டுகளுக்கு மேலாக உடமைநீக்கம் செய்யப்பட்டு என் தாயாரால் தனித்து அனுபவித்து வரப்பட்டது என்பதால் மேற்படி சொத்தின் அடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குபடி என் தாயாருக்கு 1/3 பாகம் உண்டு. இவ்வழக்கில் ஒருவேளை எனக்கு பங்கு கிடைக்கதக்கது என்று முடிவு செய்தாலும் என் தந்தையின் மொத்த சொத்துக்களில் என் தாயாருக்குரிய 1/3 பாகம் அடிப்படையில் 2 ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து அவருக்கு ஒதுக்கப்பட வேண்டிய சொத்து என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தில்

வடக்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் யார் சொத்து உள்ளது என்று தெரியும். கிழக்கே அழகர்சாமி சொத்து, மேற்கே ஓடை, தென்பக்கம் ஓடை, வடபக்கம் புறம்போக்கு ஆகும். மேற்கண்ட நான்கு மால்களை வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபின்னர் தற்போதுதான் நான்கு மால் விவரங்களை கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் உரிய நேரத்தில் வழக்கு தாக்கல் செய்யாததாலும் உரிய பரிகாரம் கோராததாலும் தாவா வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.12 16:06:53 +0530